කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

அறிக்கை இல : 04 WW/O/24/12/10/01

நிறம் : ஆம்பர்

# பலத்த மழைவீழ்ச்சி, கடும் காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் தொடர்பான ஆலோசனை:

இயற்கை அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கை நிலையத்தினால்,
2024 டிசம்பர் 11ஆம் திகதி பிற்பகல் 02.00 மணி வரை செல்லுபடியாகும் வகையில்
2024 டிசம்பர் 10ஆம் திகதி பிற்பகல் 02.00 மணியில் வெளியிடப்பட்டது.

## தென்கிழக்கு வங்காள விரிகுடா ஆழம் கூடிய கடற்பரப்புகளில் செயற்படும் பல நாள் மீன்பிடிக் கலங்களுக்கானது:

**தயவுசெய்து அவதானமாக இருக்கவும்!**

**குறைந்த அழுத்தப் பிரதேசம் தொடர்ந்தும் தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக காணப்படுவதுடன் மேற்கு - வடமேற்குத் திசையில் நகரக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. அத் தொகுதி தொடர்ந்தும் மேற்கு - வடமேற்குத் திசையில் அடுத்த 24 மணித்தியாலங்களில் இலங்கை – தமிழ்நாடு கரைகளை நோக்கி நகரக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.**

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளில் பலத்த மழைவீழ்ச்சி, மிகக் கொந்தளிப்பான கடற்பரப்புகளுடன், காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் நாளை (11ஆம் திகதி) நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.**

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk




**எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:**

- கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.